Registered as a News Paper

பக்கங்கள் 04 விலை ரூபா; 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 18 02 - 07 - 1992 வியாழக்கிழமை ஓசை 135

Y.M.C.A

## 69 கோடி ரூபா அபராதம் சுங்க தண்டத்தில் சாதனை

இலங்கை சுங்க இலாகாவின் சரித்திரத்திலேயே முதற்தடவையாக 69 கோடி ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. சுங்க இலாகா உயர் அதிகாரிகள் ஐந்து பேர் உட்படப் பதினொரு பேருக்கு இத்தண்டனை விதிக்கப்பட்டது. இவர்களில் புடைவைத் தொழில் இலாகா ஊழியர் ஒருவரும் தண்டனைக்குள்ளானார். மிகுதி ஐந்துபேரும் தொழில் அதிபர்களாவர். இவர்கள் அனைவரும் கூட்டுச் சேர்ந்து தீர்வைச் சலுகையுடன் வெளிநாட்டிலிருந்து இரண்டு இலட்சம் யார் துணிவகைகளை இறக்குமதி செய்து அவற்றினால் முழுமையாக ஆடைகள் உற்பத்தி செய்யாமல் அவற்றை மோசடி முறையில் [4 ஆம் பக்கம் பார்க்க]

# புல்லாவெளியில் இராணுவம் முடக்கம்

# விமானப்படை தொடர்ந்து அனர்த்தம்

## இரவுநேரப் பீப்பாக் குண்டுகளால் தென்மராட்சி மக்கள் கிலி

[நமது நிருபர்]

புல்லாவெளிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற உக்கிர மோதலைத் தொடர்ந்து இராணுவம் அப்பகுதியிலேயே முடங்கிக் கொண்டது. நேற்று இராணுவம் முன்னேறும் முயற்சிகள் ஏதும் மேற்கொள்ளாதினால் மோதலும் தணிந்திருந்தது இருப்பினும் நேற்றும் முப்படைகளினதும் எறிகணை, பீரங்கித்தாக்குதல்களினாலும், விமானக் குண்டு வீச்சினாலும் அப்பகுதி அதிர்ந்த வண்ணம் இருந்தது. இதேவேளை தென்மராட்சி கிராமங்கள் மீது கடந்த சில நாட்களாக இரவு நேரத்தில் 'அவ்ரோ' விமானங்கள் வீசும் பீப்பாக் குண்டுகளினால் மக்கள் கிலி கொண்டுள்ளனர்.

புல்லாவெளிப் பகுதியில் நேற்று முன் தினம் இடம் பெற்ற உக்கிரமான மோதலைத் தொடர்ந்து இராணுவத்தினர் முன்னேறும் முயற்சியைக் கைவிட்டு அப்பகுதியிலேயே முடங்கிப்போயுள்ளனர். நேற்று முன்தினம் இடம் பெற்ற மோதலில் மட்டும் 19 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், 25 பேருக்கு மேலானோர் படுகாயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால், இம் மோதலில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதம் இதைவிட அதிகம் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இம்மோதலில் ஆறு கவசவாகனங்கள் புலிகளால் சேதமாக்கப்பட்டமை தெரிந்ததே.

இதேவேளை நேற்றும் விமானப்படை விமானங்களின் தொடர்ச்சியான குண்டு வீச்சு இப்பகுதியில் இடம்பெற்றவண்ணம் உள்ளன. அத்தோடு கடற்படைக் கப்பல்களில் இருந்து தொடர்ச்சியான பீரங்கித் தாக்குதலும் ஆனையிறவு, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, புல்லாவெளிப் பகுதியில் இருந்து தொடர்ந்தும் கடும் எறிகணைவீச்சு இடம் பெற்றவண்ணமுள்ளது.

மேலும் தென்மராட்சிப் பகுதியில் மேற்கொள்ளப்படும் இரவுநேர விமானக் குண்டு வீச்சால் மக்கள் பெரிதும் அச்சம் அடைந்துள்ளனர். இரவில் வரும் அவ்ரோ விமானங்கள் வீசும் இப் பீப்பாக்குண்டுகள் கிராமங்களின் மீது வீழ்ந்து வெடிக்கும்போது மக்கள் பெரிதும் அவலத்திற்குள்ளாகின்றனர்.

## அதிகாரி உட்பட 33 படை பலி; 49 இராணுவத்தினர் படுகாயம்

(கொழும்பு)

## செஞ்சிலுவை தொண்டர்

## ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு நீங்கலாக ஏனைய பகுதிகளில் அமுலில் இருந்து வரும் ஊரடங்குச் சட்டம் இன்று காலை ஆறுமணியுடன் நீக்கப்படுவதாக சிறிலங்கா கூட்டுப்படைப் பேச்சாளர் கேணல் முனசிங்க அறிவித்துள்ளார்.

### அம்பாறையில் 330 தமிழ் குடும்பங்கள்

## சொந்த இருப்பிடங்கள் திரும்ப முடியாது அவதி

(அக்கரைப்பற்று)

அம்பாறை மாவட்டத்திலுள்ள ஆலையடிவேம்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடந்த இரண்டு வருடங்களாக அகதிகளாக வாழ்ந்து வரும் 330 தமிழ்க் குடும்பங்கள் தமது சொந்த இடங்களுக்கு மீளக் குடியமர செல்லமுடியாதுள்ளது.

மாணிக்கமடு, திராய்க்கேணி இலுக்குச்சேனை, கல்லோயா, கரும்புப்பண்ணை (4ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் ஆர்ப்பாட்ட பேரணி; ஜனாதிபதியை விலக கோரிக்கை

(கொழும்பு)

கொழும்பு நகரில் நேற்றுப் பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெற்றது.

அதிகரித்துவரும் விலைவாசிகள் உயர்வைக் கண்டித்தும், மனித உரிமை மீறல்களுக்குக் கண்டனம் தெரிவித்தும், தமிழர் பிரச்சினையைத் தீர்க்க அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுக்கத்தவறி விட்டது என்று கூறியும், ஜனாதிபதி பிரேமதாசாவை பதவி விலகக் கோரியும் ஆர்ப்பாட்டம் நேற்றுப் பிற்பகல் ரவுண்

பெண்கள் சட்டி-பானைகளை அடித்தும், குரலை எழுப்பியும், கையைத் தட்டியும் சத்தம் எழுப்பினர். ஆண்கள் வெடிகளைக் கொளுத்தியும், கோஷம் எழுப்பியும், ஊது குழல்களை ஊதியும், சைக்கிள் மணிகளை அடித்தும் பெரும் சத்தம் எழுப்பி ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

### எதிர்க்கட்சிகள் போராட்டம்

## ஓசை எழுப்புவதை கட்டுப்படுத்த தீவிரமுயற்சி

(கொழும்பு)

கொழும்பில் நேற்று எதிர்க்கட்சியினரால் மேற்கொள்ளப்

பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இதற்கென முன் கூட்டியே சில பொலிஸ் காப்பினரும்

குண்டு வீச்சினாலும் அப்பகுதி அதிர்ந்த வண்ணம் இருந்தது. இதேவேளை தென்மராட்சி கிராமங்கள் மீது கடந்த சில நாட்களாக இரவு நேரத்தில் 'அவ்ரோ' விமானங்கள் வீசும் பீப்பாக் குண்டுகளினால் மக்கள் கிலி கொண்டுள்ளனர்.

புல்லாவெளிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற உக்கிரமான மோதலைத் தொடர்ந்து இராணுவத்தினர் முன்னேறும் முயற்சியைக் கைவிட்டு அப்பகுதியிலேயே முடங்கிப்போயுள்ளனர். நேற்று முன்தினம் இடம் பெற்ற மோதலில் மட்டும் 19 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், 25 பேருக்கு மேலானோர் படுகாயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால், இம் மோதலில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதம் இதைவிட அதிகம் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இம்மோதலில் ஆறு கவசவாகனங்கள் புலிகளால் சேதமாக்கப்பட்டமை தெரிந்ததே.

இதேவேளை நேற்றும் விமானப்படை விமானங்களின் தொடர்ச்சியான குண்டு வீச்சு இப்பகுதியில் இடம்பெற்றவண்ணம் உள்ளன. அத்தோடு கடற்படைக் கப்பல்களில் இருந்து தொடர்ச்சியான பீரங்கித் தாக்குதலும் ஆனையிறவு, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, புல்லாவெளிப் பகுதியில் இருந்து தொடர்ந்தும் கடும் எறிகணைவீச்சு இடம் பெற்றவண்ணமுள்ளது.

மேலும் தென்மராட்சிப் பகுதியில் மேற்கொள்ளப்படும் இரவுநேர விமானக் குண்டு வீச்சால் மக்கள் பெரிதும் அச்சம் அடைந்துள்ளனர். இரவில் வரும் அவ்ரோ விமானங்கள் வீசும் இப் பீப்பாக்குண்டுகள் கிராமங்களின் மீது வீழ்ந்து வெடிக்கும்போது மக்கள் பெரிதும் அவலத்திற்குள்ளாகின்றனர்.

## செஞ்சிலுவை தொண்டர் காயம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தொண்டர் சிறிலங்கா விமானப்படையின் குண்டு வீச்சில் காயமடைந்துள்ளார்.

சசிக்குமார் (வயது 18) என்றவரே கடமை நேரத்தில் பளையில் காயமடைந்தவராவார். [75]

# அதிகாரி உட்பட 33 படை பலி: 49 இராணுவத்தினர் படுகாயம்

## பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

யாழ். குடாநாட்டின் தென் பகுதியில் கடந்த ஐந்து நாட்களாக விடுதலைப் புலிகளுடன் நடைபெற்ற உக்கிர மோதல்களில் ஒரு உயர் அதிகாரி உட்பட முப்பத்து மூன்று சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் நாற்பத்தொன்பது பேர் படுகாயமடைந்தனர். இவ்வாறு சிறிலங்கா கூட்டுப்படைத் தலைமைப் பேச்சாளர் கேணல் சரத் முனசிங்க கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அவர் அங்கு ''பலவேகய இரண்டு'' எனும் இராணுவ நடவடிக்கை பற்றி விபரிக்கையில் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை விரிவுபடுத்துதல், வன்னிப் பகுதிக்கான தரைமார்க்கப் போக்குவரத்துத் தொடர்பைத் துண்டித்தல் எனும் இரு முக்கிய நோக்கங்களை நிறைவேற்றப் படையினர் தாக்குதல் நடாத்தி வருகின்றனர்.

யாழ்.குடாவின் கரையோரப் பகுதியான கட்டைக்காட்டுப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் அதிகாலை நான்குமணிமுதல் பிற்பகல் ஆறு மணிவரை

[4 ஆம் பக்கம் பார்க்க]

# 6 புலிகள் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

கட்டைக்காடு, புல்லாவெளிப்பகுதியில் நேற்று முன் தினம் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் மேலும் ஆறு புலிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். இம் மோதலில் வீரச்சாவடைந்த நால்வரின் விபரங்கள் நேற்றுப் பத்திரிகையில் வெளிவந்தது தெரிந்ததே.

வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வேங்கைகள் விபரம் வருமாறு:

மேஜர் குமரன் (துரைசாமி துரைசிங்கம் - நெல்லியபோடி யார்கன்மட்டக்களப்பு) மேஜர்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# ஆனையிறவுப் பகுதியில் முப்படைத் தளபதிகள்

(கொழும்பு)

வடபகுதியில் சிறிலங்காப் படையால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் ஒப்பரேசன் பலவேகய இரண்டு நடவடிக்கைகளை வழிநடத்துவதற்காக இராணுவத் தளபதி சிசில் வைத்திய ரெட்ண, கடற்படைத் தளபதி கிங்ஸ்லி பெர்ணான்டோ விமானப் படைத் தளபதி டெரன்ஸ் குணவர்த்தன ஆகியோர் ஆனையிறவுக்குச் சென்றனர் என்று கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவ நடவடிக்கைகளை தீவிரப்படுத்தும் வகையிலேயே தளபதிகள் ஆனையிறவுக்குச் சென்றனர் என்றும்.

வடபகுதிக்கு அனுப்புவதற்காக பெருந்தொகையான இராணுவத்தினர் அநுராதபுரத்திலிருந்து திருக்கோணமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்றும் கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## வீரச்சாவு

### கலைவாணன், சேனன், அன்புமாறன்

கட்டைக்காடு பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மோதலில் சேனன் (குகராசா தங்கப்பதக்கம் கிளிநொச்சி) கலைவாணன் (அருணாசலம் லவக்குமார் அம்பாறை) அன்புமாறன் (அன்ரன் அருள்நேசன் நீர்வேலி) ஆகிய வீரவேங்கைகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டுள்ளனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்தியுள்ளனர்.

# தெரிவுக் குழுவின் திட்டம் தமிழ் குழுக்கள் நிராகரிப்பு

## கடிதம் மூலம் அறிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான ஒரு அரசியல் தீர்வாக முன்வைக்கப்பட்ட வட-கிழக்கு தனித்தனி மாகாண யோசனையை பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகள் ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை எனத் தெரிகிறது.

அந்த யோசனை தொடர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் ஆர்ப்பாட்ட பேரணி; ஜனாதிபதியை விலக கோரிக்கை

(கொழும்பு)

கொழும்பு நகரில் நேற்றுப் பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெற்றது.

அதிகரித்துவரும் விலைவாசிகள் உயர்வைக் கண்டித்தும், மனித உரிமை மீறல்களுக்குக் கண்டனம் தெரிவித்தும். தமிழர் பிரச்சினையைத் தீர்க்க அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுக்கத்தவறி விட்டது என்று கூறியும், ஜனாதிபதி பிரேமதாசாவை பதவி விலகக் கோரியும் ஆர்ப்பாட்டம் நேற்றுப் பிற்பகல் ரவுண் ஹோல் அருகில் நடைபெற்றது.

இதில் ஆண்களும் பெண்களுமாகத் திரளான மக்கள் கலந்து கொண்டார்கள். 'ஜனகோஷம்' என்று அழைக்கப்படும் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி உட்பட பல எதிர்க் கட்சிகள் அழைப்பு விடுத்திருந்தன.

ஆர்ப்பாட்டத்தின் போது பெண்கள் சட்டி-பானைகளை அடித்தும், குரலை எழுப்பியும், கையைத் தட்டியும் சத்தம் எழுப்பினர். ஆண்கள் வெடிகளைக் கொளுத்தியும், கோஷம் எழுப்பியும், ஊது குழல்களை ஊதியும், சைக்கிள் மணிகளை அடித்தும் பெரும் சத்தம் எழுப்பி ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

## எதிர்க்கட்சிகள் போராட்டம்

# ஓசை எழுப்புவதை கட்டுப்படுத்த தீவிரமுயற்சி

(கொழும்பு)

கொழும்பில் நேற்று எதிர்க்கட்சியினரால் மேற்கொள்ளப்பட்ட ஓசை எழுப்பும் போராட்டத்தை கட்டுப்படுத்த பொலிசார் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இதற்கென முன் கூட்டியே சகல பொலிஸ் தரப்பினரதும் லீவுகள் அடுத்த அறிவிப்பு வரை ரத்துச் செய்யப்பட்டிருந்தது

# தடுப்புக்காவல் நீடிப்பு

(சென்னை)

ராஜீவ்காந்தி கொலை வழக்குத் தொடர்பாகச் சிறை வைக்கப்பட்டுள்ள நளினி முருகன் உட்பட 26 பேரை இம் மாதம் 15 ஆம் திகதிவரை காவலில் நீடித்து வைக்கும் படி இந்த வழக்கை விசாரிக்கும் சிறப்பு நீதிபதி எஸ் எம். சித்திக் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

# தாய்நாட்டை காட்டிக்கொடுத்த 9 பேருக்கு மரணதண்டனை

(நமது நிருபர்)

தாய்நாட்டை சிறிலங்கா இராணுவத்தினருக்குக் காட்டிக் கொடுத்த ஒன்பது உளவாளிகளுக்கு தமிழீழ விடுதலைப்புலிகளால் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''தாய் நாட்டைக் காட்டிக் கொடுத்த உளவாளிகள்'' எனும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முழுவிபரங்களும் வருமாறு:-

எமது விடுதலைப் போராட்டமானது பல்லாயிரக்கணக்கான மக்களும், போராளிகளும் சிந்திய குருதியினால் இவ் உன்னத நிலைக்குக் கட்டி வளர்க்கப்பட்டுள்ளது.

நேரடியான இராணுவ முறைகள் தனக்கு வெற்றியைத் தேடித்தராதென்பதை உணர்ந்த சிறிலங்கா அரசு மறைமுக உளவுவேலைகளைப் பல்வேறு வடிவத்தில் முடுக்கி விட்டுள்ளது. எமது மக்கள் மத்தியில் கலந்திருக்கும் புல்லுருவிகளைத் தனது உளவாளிகளாகப் பயன்படுத்தி அதன் மூலம் எம்மைப்பலவீனப் படுத்த சிறிலங்கா அரசு திட்டமிட்டுள்ளது.

காலத்திற்குக்காலம் எமது இனம் சந்தித்த துரோகத்தனங்கள், காட்டிக்கொடுப்புக்கள், எமதுவரலாற்றிற் பதிந்த துயரவடுக்கள் இன்னுமே மாறவில்லை எமது அரிய போராளிகள், உயரிய தளபதிகள், இனிய மக்கள், எமது தாயகப் பூமியின் சொந்தமான நிலங்கள் துரோகத் தனங்களால் நாம் இழந்தவை மிகமிக அதிகம், அளவிட முடியாதவை.

இலங்கைஅரசின் உளவுப்படையால் பயிற்றுவிக்கப்பட்டுத் தமிழீழப் பிரதேசத்தில் உளவு வேலையிலீடுபட்டுவந்த பலர் கடந்தசிலமாதங்களில் எம்மால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். அவர்களிற் செல்லையா அம்பிகைபாலன் (வயது-38, தாமரைக்குளம், அடம்பன், மன்னார்), பேதுரு சந்தான் (வயது-48, தாமரைக்குளம், அடம்பன், மன்னார்), பல்ராஜசிங்கம் மகேஸ்வரன் (வயது-27, தேனுடையான் அடம்பன், மன்னார்), இராமையா சிவப்பிரகாசம் (வயது-40. மாணிக்கவளவு, ஓமந்தை வவுனியா). விஸ்வலிங்கம் நாகராஜா (வயது-44, உயிலங்குளம். மன்னார்). அரியரத்தினம் சிவானந்தம் (வயது-31, பாவற்குளம், வவுனியா). அம்பிரட் டொமினிக் அருள்சேகரம் (வயது-48, நாவற்குளம், ஓமந்தை வவுனியா). நல்லான் சுப்பையா (வயது-40, வள்ளுவர்புரம். விசுவமடு, கிளிநொச்சி

(4ஆம் பக்கம் பார்க்க)

# தேச துரோகத்தை ஒருபோதும் மன்னித்துவிட முடியாது

## - பொற்கோ

[யாழ்ப்பாணம்]

எம் மண்ணின் விடுதலைக்காக ஒவ்வொரு போராளியும் இரத்தம் சிந்திக் கொண்டிருக்கும் இந்த யுத்தகால சூழ்நிலையில் நம் தேசத் துரோகத்திற்கு ஒருபோதும் அனுமதிக்க முடியாது'' இவ்வாறு விடுதலைப்புலிகளின் பிரமுகர் திரு. பொற்கோ தெரிவித்தார்.

நேற்று விடுதலைப்புலிகளின் அரசியல்பிரிவுயாழ். தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போது தேசத்துரோகிகள் ஒன்பது பேரை இனம் கண்டு இவர்களுக்கு விடுதலைப் புலிகளினால் மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளதாக கூறிய வேளை இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்; இப்படியான தேசத் துரோக நடவடிக்கைகளில் ஈடு

(4ஆம் பக்கம் பார்க்க)

## நிறைவு தின வைபவம்

(யாழ்ப்பாணம்)

ஜெய்ப்பூர் செயற்கைக்கால் பொருத்தும் திட்டம் யாழ்ப்பாணத்தில் தொடங்கி ஐந்து வருட பூர்த்தியை ஒட்டிய (30-06-1987 - 30-06-1992) நிறைவு தின வைபவம் எதிர்வரும் (5-7-1992) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிலகத்தில் நடைபெறவுள்ளது.

## விருட்சம் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ மாணவ மன்றத்தின் "விருட்சம்" சஞ்சிகை வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை (03-07-1992) அன்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

## சிறையிலிருந்து தப்பியவர் சுட்டுக்கொலை

நான்கு வருடங்களுக்கு முன்னர் சிறையிலிருந்து தப்பியோடிய ஒருவர் பொலிசாரால் சுட்டுக்கொல்லப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. சுமார் இருபது நிமிடங்கள் வரையில் நீடித்த துப்பாக்கிச்சண்டையின் பின்னரே அவர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## தீர்மானம்

இலங்கையில் தமிழ், சிங்கள மக்களிடையே நல்லுறவை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள அந்நாட்டு அரசை வற்புறுத்தும்படி இந்திய மத்திய அரசைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்று அ. இ. அ. தி. மு. க மதுரை மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

---

### 1-ம் ஆண்டு நினைவஞ்சலியும்
## நினைவு நாள் அழைப்பும்



வீர ஜனனம்
15.03.1968

வீரச்சாவு
15.07.1991

லெப். "பூசி"

[சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி]

(ஆறுமுகபிள்ளை ஸ்ரீசுந்தரம்)

திதி 03 07-1992

பெற்ற தாய்தனை மறந்தாலும்
பிறந்த பொன் நாட்டை மறவேன் என்று
உற்ற நெஞ்சுரத்துடன் ஓடினாய் ஸ்ரீ!
எதிரிகள் பாசறைகள் எங்கும்
பற்றிய ஆயுதம் கைநழுவ விடாமல்
பகலிரவென்று போராடினாய்
வெற்றியோ தோல்வியோ உன் வீரம்
சிலாவத்துறை, ஓமந்தை, காரைநகர், பூவரசங் குளத்திலும்
முற்றுப் பெரு முடிவடைந்த ஆனையிறவுப் போரிலும்
முழுமையாகக் கண்டும் மனம் பூரித்தோம்
சற்றும் எதிர்பாராமல் உன் உயிரையும்
முற்று முழுதாகத் தந்தே தியாகச் சுடரானாய் ஸ்ரீ!
தேற்று வாரின்றி அழுத கண்ணீரும் சிந்திய மூக்குமாய்
கிடந்து கிடக்கிறாள் உன் அன்னை. நினைந்து
கிடக்கிறாள் ஓராண்டு - சென்றாலும்
மாற்றான் வசமிருந்து ஆனையிறவைக் கைப்பற்றும் வரை
மானமுள்ள உன் ஆத்மா சாந்திபெறாது அதனாற்றான மீண்டும் போரா?

நாளை 3.07.1992 அன்று வீட்டில் நடைபெறும் கிரியையிலும் மதிய போசனத்திலும் உற்றார் உறவினர் நண்பர்கள் சகபோராளிகளும் கலந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பூசி வீதி
ஏ.ஜி ஏ. லேன்
நெடியகாடு
வல்வெட்டித்துறை


இங்ஙனம்
உன் நினைவால் வாடும்
குடும்பத்தினர்

(2740)

---

வெள்ளிவிழாவிற்கு விருந்தினனானவன்
விடுதலைப்போரிலே விடிவெள்ளியானான்

வீரஜனனம்
13
—
1
—
1966



வீரச்சாவு
29
—
06
—
1992

## மேஜர் அழகன்

மூன்று நாள் முன் விருந்தில் கலந்தாய் - உடன்
சென்று போரில் வீரம் விளைத்தாய்
என்றுமே மலரான முகத்தாய் - அந்தோ
இன்று புகழுடலாகி எழுந்தாய்

27-06-92 சனிக்கிழமை எமது வெள்ளி விழாவில் விருந்தினராய் கலந்து கொண்டு 29-06-92 இல் வீரச்சாவடைந்த மேஜர் அழகனுக்கு நவில்ட் பாடசாலை செவிப் புலனிழந்தோர் பழைய மாணவர் சங்கத்தின் கண்ணீர் அஞ்சலி.

நவில்ப் பாடசாலை,
செவிப்புலனிழந்தோர் பழைய மாணவர் சங்கம்.

(2747)

---

## 1ஆம் ஆண்டு வீர அஞ்சலி



வீரனாய்
26
08
1969

மாவீரனாய்
14
07
1991

## லெப்டினன்ட் யாதவன்
(கந்தையா கமலக்கண்ணன்)


களம் பல கண்ட புலி
கமலக்கண்ண மாவீர
களத்தினை சாய்ந்து இன்றோ
காலம் ஓர் வருடமன்றோ!
உளத்திலே உவரை வைத்து
உடன்பிறந்தோர் உற்றார்.
விளக்கிட முடியா வேதனையோடு
வேண்டுகிறார் சாந்தியுற வென்றே!

பெற்றோர்,
பாண்டியன்தாழ்வு, சகோதர, சகோதரிகள்,
யாழ்ப்பாணம். உற்றார், உறவினர்.

(2744)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரஜனனம்
06
—
07
—
1975

வீரச்சாவு
13
—
07
—
1991

## வீரவேங்கை மாவீரன் சிவநாதன்
(செல்லத்துரை ஜெயராஜ்)

13-07-91 அன்று ஆனையிறவுப் போரில்

---

## நினைவு கூருகின்றோம்...

### 1992-07-02

1987 ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரச்சாவெய்திய-

★ **சாந்தன்** (நாகராசா சந்திரரூபன்- மாவடிச்சேனை மூதூர், திருக்கோணமலை.)

கிளிநொச்சி / பரந்தன் முரசுமோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**குமாரதாஸ்** (கந்தையா குமாரதாஸ்-கண்டாவளை, பரந்தன், கிளிநொச்சி.)

1988 ஆம் ஆண்டு வன்னேரிக் குளத்தில் இந்தியப் படையினருடனான மோதலின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**சமுத்திரன்** (இராமநாதன் மனோகரராசா - வன்னேரிக்குளம்.)

1989 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

**சுதா** (சீ. ஜெயக்குமார் - யாழ்ப்பாணம்)

வவுனியா கோணிக்குளம் பகுதியில் இந்திய இரா

---

யாழ். இந்துக் கல்லூரி அன்னை
# உதிரம் வடிக்கின்றாள்

மண்மீட்புப் போரில் தன் மைந்தர்களில்
மேலும் ஒரு வீரனை

## 2-ம் லெப்டினன்ட் மணிமாறன் (சர்மா)
(வை. ரமணானந்த சர்மா)

அரசை வற்புறுத்தும்படி இந்திய மத்திய அரசைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்று அ. இ. அ. தி. மு. க மதுரை மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

யூசி வீதி
ஏ. ஜி. ஏ. லேன்
நெடியகாடு
வல்வெட்டித்துறை

இங்ஙனம்
உன் நினைவால் வாழும்
குடும்பத்தினர்

(2740)

---

யாழ். இந்துக் கல்லூரி அன்னை

# உதிரம் வடிக்கின்றாள்

மண்மீட்புப் போரில் தன் மைந்தர்களில்
மேலும் ஒரு வீரனை

## 2-ம் லெப்டினன்ட் மணிமாறன் (சர்மா)

(வை. ரமணானந்த சர்மா)

அர்ப்பணித்துள்ளாள்

மணிமாறா உன் பாதையில்

## நாம் புனிதப்பணி தொடர்வோம்

விடநேரினும் உயிரே நிலம்
விடவோ என எழுந்த
அடலேறு நம் ரமணானந்தன்
அருஞ்சாதனை சிலவோ
பொடியாய்விழ எதிரிக்குலம்
பொருதான் மணிமாறன்!
கொடியோர் படை தடுத்தான் அடி
கொடுத்தான் நிலம் சாய்ந்தான்

யாழிந்துதன் உயர் மாணவர்
அணி ஒன்றியத் தலைவன்
வாழும்பணி புரிசாரணர்
வளர்க்கும் மணித்தலைவன்
தோழர் எமை மண்மீட்டிடத்
துடிப்போர் தமை அதிர்ச்சி
சூழத்தமிழ் ஈழக்கொடி
துளங்கத் தலை சாய்ந்தான்

காற்றில் அவன் கரைந்தான் ஈழக்
கனவில் அவன் கலந்தான்
சிற்றம் கனல் வேங்கை, தமிழ்
தேசத் துளந் தோறும்
ஏற்றிச் சுதந் திரவேட்கையாம்
எழுச்சிச் சுடர் உயர்ந்தான்
போற்றிப் புலி அவன் ஏந்திய
புனிதப்பணி தொடர்வோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்

பழைய மாணவர் சங்கம்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

(சி/4637)

---



07
—
1975
வீரச்சாவு
13
—
07
—
1991

### வீரவேங்கை மாவீரன் சிவநாதன்

(செல்லத்துரை ஜெயராஜ்)

13-07-91 அன்று ஆனையிறவுப் போரில்
வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

70, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

அப்பா, அம்மா, அண்ணா,
தங்கை, உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

(2743)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:
15-11-1969

வீரச்சாவு:
14-07-1991

### லெப். குணேஸ்

(செல்வராசா பேரின்பமோகன்-ஆதவன்)

புங்குடுதீவு

சுற்றிவரும் பகை ஒழிக்க
கடுபடைக் கலம் ஏந்தி
வெற்றி பெறும் வேட்கையொடு
வேங்கை நீ சென்ற ஆண்டில்
வெற்றிவலக் கேணி சென்று
வென்றனை வீர சொர்க்கம்
முற்றிய மண்ணின் பற்றால்
முற்று முவன அர்ப்பணித்தாய்
பற்றெலாம் துறந்து ஈழ
பற்றினை கொண்ட குணேஸ்
நாற்றென வீழ்ந்த வீரா
நம்மிடை என்றும் வாழ்வாய்
போற்றிய நினது கொள்கை
பொய்த்திடா வண்ணம் காப்போம்.

சந்தோஷம் வீதி,
செம்மண் லேன்,
அரியாலை.

இங்ஙனம்
குடும்பத்தினர், நண்பர்கள்

(2747)

---

## 1992-07-02

1987 ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரச்சாவெய்திய-

★ **சாந்தன்** (நடராசா சந்திரரூபன் - மாவடிச்சேனை மூதூர், திருக்கோணமலை.)

கிளிநொச்சி / பரந்தன் முரசுமோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**குமாரதாஸ்** (சந்தையா குமாரதாஸ்-கண்டாவளை, பரந்தன், கிளிநொச்சி.)

1988 ஆம் ஆண்டு வன்னேரிக் குளத்தில் இந்தியப் படையினருடனான மோதலின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**சமுத்திரன்** (இராமநாதன் மனோகரராசா - வன்னேரிக்குளம்.)

1989 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

**சுதா** (சீ. ஜெயக்குமார் - யாழ்ப்பாணம்)

வவுனியா தோணிக்கல் பகுதியில் இந்திய இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப் பெண்.

1990 ஆம் ஆண்டு காரைநகரில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**பரணி** (இரத்தினம் சுரேந்திரன் - துறைமுகம், காரைநகர்.)

அம்பாறை அறுகம்பை முகாமில் வைத்து சிறிலங்காப் படையினரால் ரயர் போட்டு எரித்துக் கொல்லப்பட்ட பொத்துவிலைச் சேர்ந்த 2 தமிழர்கள்- இதே மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பெண், இளைஞன் உட்பட 4 ஆம் கொலனியைச் சேர்ந்த 3 தமிழர்கள்.

மட்டக்களப்பில் சுற்றிவளைப்பினை மேற்கொண்ட சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மநாச்சிமுனையைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

1991 ஆம் ஆண்டு மன்னார் ஒலைத் தொடுவாய்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**கப்டன் பரீது** (சிமியோன் அல்பிறட்கமிலஸ்-ஒலைத் தொடுவாய், மன்னார்.)

**2-ம் லெப். காளி** (அ. புவிராஜசிங்கம் - நாவற்காடு கரவெட்டி, மட்டக்களப்பு.)

**பரமேஸ்** (க. உதயகுமார் - நல்லூர், பூநகரி, மன்னார்.)

**வதனன்** (தாசியஸ் பீரீஸ்ஜேம்ஸ் - வங்காலை, மன்னார்.)

திருக்கோணமலை / இறால்குழி, இத்திக்குளம், மரவட்டைக்குளம், நெய்யந்திக்குளம், உப்புவெளிப் பகுதிகளைச் சுற்றிவளைத்த கட்டைபறிச்சான், தோப்பூர் முகாம்களைச் சேர்ந்த சிறிலங்கா இராணுவத்தினரால் உப்புவெளியில் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

**ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்**

★ மேற்குறிப்பிட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4633)

## சிந்தனைக்கு

சாதுரியத்தின் முன்பு, சங்கடங்கள் கரைந்து விடும்.

-- பெஞ்சமின் டிஸ்ரேலி

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 02-07-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 8308
த. பெ. [illegible]

# ராணுவத் தீர்வெனில் பதிலடி கொடுப்போம்!

"இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு, தனது கூட்டத்தொடரை உடன்பாடு எதையும் காணமுடியாத நிலையில் ஒத்தி வைத்துள்ளது" கடந்த 29 ஆம் திகதி கூடிய இத்தெரிவுக்குழு உழம்பிய நிலையில் அன்றே கூட்டத்தை ஒத்திவைத்தது.

பாராளுமன்றத் தெரிவுக்குழு 29 ஆம் திகதி கூட்டப்படுவதற்கு முன்னர், இம்முறை பாராளுமன்றத் தெரிவுக்குழு இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக ஒரு முடிவுக்கு வருமெனத் தெரிவிக்கப்பட்டது. அதாவது ஒரு முடிவிற்குவரும் வரை பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் கூட்டத்தொடர் தொடர்ந்தும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், தெரிவுக்குழு கூடிய உடனேயே பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் கூட்டம் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தீர்வுத்திட்டத்தை தமிழ்க் குழுக்கள் நிராகரித்தமையும், தமிழ்க் குழுக்களின் நான்கு அம்சத் திட்டத்தை பாராளுமன்றத் தெரிவுக்குழு ஏற்க மறுத்தமையுமே, இவ் ஒத்திவைப்பிற்குக் காரணமாகும்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவினால், தமிழரின் அபிலாசைகளைத் தீர்க்க முடியாது என்பது முன்னரே தெரிந்த விடயம்தான். சிறிலங்கா பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அதே சிங்கள பேரினவாத சக்திகள்தான் பாராளுமன்றத் தெரிவுக் குழுவையும் அதே, விகிதாசாரத்தில் பிரதிநிதித்துவப் படுத்துவதென்பதில் இருந்தே அதைப்புரிந்து கொள்ளலாம். ஆனால், நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி, உயிர் இழப்புக்கள் என்பவற்றுடன் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணாவிட்டால், நாடே உருப்படாது என்ற நிலையில் மிகக்குறைந்த பட்ச முடிவாவது பாராளுமன்றத் தெரிவுக்குழு முன்வைக்கும் என சிலரால் எதிர்பார்க்கப்பட்டது. அதிலும் குறிப்பாக கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்களினால் எதிர்பார்க்கப்பட்டது.

அதாவது, கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்கள் அரசியல் நடத்தக்கூடிய அளவிலாவது, இத்தெரிவுக்குழு தீர்வுத்திட்டத்தை வைக்கும் என எதிர்பார்த்தன. ஆனால், சிங்களப்பேரினவாத சக்திகள் தமது நிலைப்பாட்டில் இருந்து இம்மியளவுதானும் நகரவில்லை. அதாவது, கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் தமது இனத்திற்கு பெரும் துரோகமிழைத்து காட்டிக்கொடுப்புக்களைச் செய்த போதும் அவர்களின் எதிர்

# ஜெயலலிதாவின் நில பேரங்கள்

போயஸ் தோட்டத்தில் ஆழமாகக் காலூன்றிக் கொண்ட முதல்வர் ஜெயலலிதா தன் சாம்ராஜ்யத்தை விரிவு படுத்துவதில் ஆர்வம் காட்டுகிறார்.

ஜெயலலிதாவின் எதிரிகள் இதை நல்ல வாய்ப்பாக்கிக் கொண்டுவிட்டார்கள். அவர்களுக்கு மெல்லக் கிடைத்த ருசிகரமான அவல்: ஜெயலலிதாவும் சசிகலாவும் பங்குதாரர்களாக உள்ள ஜெயா பப்ளிகேஷன்ஸ் சென்னை, கிண்டி தொழிற்பேட்டையில் மூன்று ஏக்கரில் அமைந்த நலிவடைந்த தொழிற்சாலை ஒன்றை ரூ. 1.87 கோடிக்கு வாங்கியது. தமிழக அரசு நிறுவனமான டான்சிக்கு சொந்தமான இந்த இடத்தை ஜெயா பப்ளிகேஷன்ஸ் டெண்டர் மூலம் அதிகபட்ச விலை தந்துதான் வாங்கியிருக்கிறது. இதற்கு அடுத்த படியாக கேட்கப்பட்ட விலை ரூபா 80 லட்சம் என்றாலும் இவர்கள் நிலம் வாங்குவது முறையானதுதானா என்பது பற்றி கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

விற்பனையைப் பொறுத்த வரை டான்சிக்கு இதைவிட அதிகவிலை கிடைத்திருக்க முடியாது என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் அரசுத்துறை நிறுவனத்திடமிருந்து ஒரு முதலமைச்சர் சொத்து வாங்கலாமா என்பதுதான் முக்கியமான கேள்வி. கருணாநிதி குறிப்பிட்டது போல, 1969 மே மாதம் பிறப்பிக்கப்பட்ட ஒரு அரசு ஆணை அமைச்சர்கள் அரசாங்க டெண்டர்களில் கலந்து கொள்வதை திட்டவட்டமாகத் தடை செய்கிறது. தொழிற்பேட்டை மார்க்கெட் நிலவரத்தை வைத்துப்பார்க்கையில் இந்த நிலம் ஜெயலலிதா கொடுத்ததைப் போல மூன்று மடங்கு மதிப்புள்ளது என்று கருணாநிதியும், திருநாவுக்கரசுவும் குற்றம் சாட்டி இருக்கிறார்கள்.

இன்னொரு முக்கியமான கேள்வி. ஜெயலலிதாவிற்கு எங்கிருந்து இவ்வளவு பணம் கிடைத்தது என்பதுதான். அதுவும் வருமானவரி இலாகா அனுமதி அளித்த ஒரு விற்பனையில்? இந்தச் சொத்தை வாங்க ஜெயா பப்ளிகேஷன்ஸ் நிறுவனம் கணிசமான தொகையைக் கடன்வாங்கியிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. இது உறுதி செய்யப்படவில்லை. அவரை விமர்சிக்கும் எதிர்க்கட்சிக்காரர்கள் பல குற்றச்சாட்டுக்களை கூறுகிறார்கள். ஜெயலலிதாவோ, சசிகலாவோ இதற்கெல்லாம் பதில் சொல்லவில்லை. இந்தப் பப்ளிகேஷனின் வெளியீடான அ. இ. அ. தி. மு. க. நாளேடு நமது எம். ஜி. ஆர். 1989 ஆம் ஆண்டிலிருந்துதான் வெளியாகிறது.

தி. மு. க. ஆட்சியில் நமது எம். ஜி. ஆர். பணத்திற்கு கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தது. ஆனால் ஜெயலலிதா கோட்டைக்கு வந்த பிறகு அதன் தலைவிதி மாறிவிட்டது. பதவிக்கு வந்த உடனேயே முதல்வர் அதே கிண்டி தொழிற்பேட்டையில் உள்ள இதயம் பேசுகிறது வார இதழின் அச்சகத்தை ரூ. 12.60 லட்சத்திற்கு விலைக்கு வாங்கினார். அரசின் பாடநூல் நிறுவனத்திடமிருந்தும், செய்தித்துறையிடமிருந்தும் இந்த அச்சகத்திற்கு நிறைய ஆர்டர்கள் வந்திருக்கின்றன. கட்சிபோஸ்டர்களுக்கான ஆர்டர்களும் வருகின்றன.

ஜெயலலிதாவின் சாம்ராஜ்யம் தமிழகத்தை தாண்டியும் விரிகிறது. ஹைதராபாத்திலிருந்து 16 கிலோமீட்டர் தொலைவிலுள்ள ஜீடிமெட்லா என்ற இடத்தில் ஜெயலலிதாவிற்கு சொந்தமான 18 ஏக்கர் பண்ணையில் திராட்சை, தேங்காய், வாழை

> ※ சென்னையில் உள்ள கிண்டித் தொழிற்பேட்டையில் 1.87 கோடி ரூபாய் மதிப்பில் ஒரு சிறு தொழிலகம்.
>
> ※ இதயம் பேசுகிறது வார இதழுக்கு சொந்தமான 12.60 லட்ச ரூபாய் மதிப்பிலான ஒரு அச்சகம்
>
> ※ ஹைதராபாத் அருகில் 18 ஏக்கர் பரப்பளவில் பண்ணை ஒன்று.

பயிராகின்றன. நெடுஞ்சாலையில் அமைந்து இருக்கும் இந்த நிலத்திலிருந்து ஒரு ஏக்கருக்கு ரூ 2 லட்சம் வருமானம் கிடைக்கிறது. 10 வருடங்களுக்கு முன்பு இதை வாங்கி விட்ட ஜெயலலிதா அதிர்ஷ்டக்காரர்தான். கடந்த சில மாதங்களில் பண்ணையைச் சுற்றிலும் 10 அடி உயர கருங்கல் சுவரையும் எழுப்பியிருக்கிறார். இதற்கு மட்டும் சில லட்சங்களாவது செலவாகியிருக்கும் என்று உள்ளூர் காண்ட்ராக்டர் ஒருவர் கூறுகிறார்.

இந்தப் பெரிய சுவருக்குப் பின்னால் ஜெயலலிதா ஒரு பெரிய பங்களா கட்டி வருகிறார். இதற்கு ரூபா 35 லட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. தஞ்சாவூரிலிருந்து தருவிக்கப்பட்ட தச்சர்களும், கட்டடத் தொழிலாளர்களும் பண்ணையிலேயே தங்குகிறார்கள். தமிழ் வார இதழ் ஒன்று இந்த வீட்டின் புகைப்படங்களைப் பிரசுரித்த போது, அதை நான் பார்த்ததேயில்லை என்று சட்டமன்றத்தில் ஜெயலலிதா கூறினார். ஆனால் தனது திராட்சைத் தோட்டத்தில் ஒரு பண்ணை வீடு கட்ட அனுமதி கேட்டு ஹைதராபாத் நகர வளர்ச்சி அமைப்பிற்கு ஜெயலலிதா கைப்பட எழுதிய கடிதத்தை தில்லி ஸ்டேட்மென் பிரசுரித்து இவரது பேச்சில் உள்ள முரண்பாட்டை அம்பலப்படுத்தியது. இந்தக் கடிதத்தை 1991 ஜனவரியில் தில்லியிலிருந்து தமிழகத்திற்குத் திரும்புகையில் ஆந்திர முதல்வர் ஜனார்த்தன ரெட்டியிடம் ஜெயலலிதா நேரில் கொடுத்தார் என்று சொல்லப்படுகிறது. இரண்டே வாரங்களில் அனுமதி கிடைத்துவிட்டது.

இவ்வளவு குறுகிய காலத்திற்குள் முதலமைச்சருக்கு இவ்வளவு பணம் எப்படி வந்தது என்று ஜெயலலிதாவின் எதிரிகள் கேள்வி எழுப்புகிறார்கள். என்னிடம் பணமே இல்லை என்று 1989 இல்தான் அவர் பகிரங்கமாக அறிவித்திருந்தார். தேர்தல் பிரசார செலவிற்காக 10,000 சதுர அடி பரப்பளவுள்ள ஒரு கோடி ரூபாய் பெறுமானமுள்ளதென்று நம்பப்படும் போயஸ் தோட்ட வீட்டை அடமானம் வைக்கக் கூட அவர் தயாராக இருந்தார். "தேர்தலுக்குப் பிறகு அவரிடம் பணமே இல்லை. நான் 20 லட்ச ரூபாய் கொடுத்தேன்" என்கிறார் திருநாவுக்கரசு.

ஆனால் தேர்ந்த அரசியல்வாதியான ஜெயலலிதா இந்தக் குற்றச்சாட்டுக்களையெல்லாம் கண்டு அசந்து விடவில்லை. "நான் சினிமாவில் நடித்து நிறையப் பணம் சம்பாதித்தேன்" என்கிறார். நடித்துக் கொண்டிருந்தபோதுதான் திராட்சைத் தோட்டத்தை வாங்கியதாகக் கூறுகிறார். ஆனால் கிட்டத்தட்ட 125 படங்களில் நடித்துள்ள இவர், ஒரு படத்திற்குப் பெற்ற அதிகபட்சத் தொகை ரூபா 90,000 என்று சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அந்தப் பணம் ரொம்பவும்தான் இவருக்கு இப்போது கைகொடுக்கிறது. அரசியலில் மிகச் சிறந்து விளங்கும் ஜெயலலிதா, வியாபாரத்திலும் கெட்டிக்காரராக மாறி வருகிறார்.

நன்றி: இந்தியா டுடே

# பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் இனப்பிரச்சினையின் தீர்வுத் திட்டம்

இனப் பிரச்சினைக்கு தீர்வொன்றைக் காண்பதற்கென அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு அரசியல் கட்சிகளுக்கிடையே தற்போது விநியோகித்துள்ள ஆவணத்தின் சில பகுதிகள் வெளியிடப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கிற்கு இரண்டு தனித் தனி சபைகள் மற்றும் இரண்டிலும் உள்ள பிரதிநிதிகளைக் கொண்ட இணைந்த சபை பற்றி குறிப்பிடும் இத் தீர்வுத் திட்டத்தில் காணப்படும் சில விபரங்கள் வருமாறு:-

## இரண்டு சபைகள்:-

... எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்யக்கூடியதாகவும் அவை அமைய வேண்டும்.

## நடைமுறைப்படுத்தும் அமைப்புகள்

பகிர்ந்து செய்யப்பட்ட அதிகாரங்கள் அனைத்தும் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க ஒரு தனியான அமைப்பு உருவாக்கப்படும். இந்த அமைப்பின் உறுப்பினர்களின் விகிதாசாரம் குறித்து பாராளுமன்றத் தெரிவுக்குழு முடிவுசெய்யும்.

## தேசிய சபை

இதன் இரண்டாம் கட்டமாக வடக்கு - கிழக்கு மாகாணங்களின் நிர்வாகத்திற்கென இடைக்கால நிர்வாக சபையொன்று நிறுவப்படும். பாராளுமன்றத்திற்கு உள்ளும் வெளியிலும் செயற்படும் அரசியற் கட்சிகள் புனர்வாழ்வு, மற்றும் புனர்நிர்மாணப் பணிகளை நிறைவேற்றும் இலக்குடன் இதற்கான உறுப்பினர்களை நியமனம் செய்யும் உரித்துடையனவாகும். நியமிக்கப்படும் இந்த இடைக்கால சபையின் உறுப்பினர்கள் இந்தப் பிராந்தியத்தின் பல்வேறு இடங்களிலும் மேற்கொள்ளப்

# இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சட்டமன்ற உறுப்பினர் கைது

[சென்னை]

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் நாடு சட்ட மன்ற உறுப்பினர் கோ. பழனிச்சாமி நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்சக் கூலியை உயர்த்துவது, உபரி நிலங்களைப் பகிர்ந்தளிப்பது போன்ற கோரிக்கைகளுக்காக தஞ்சை, நாகை, சாயிதே. மில்லத் மாவட்டங்களில் தமிழ் நாடு விவசாயிகள், தொழிலாளர்கள் சங்கம் சார்பில் அரசு அலுவலகங்களின் முன் நேற்று மறியல் போராட்டம் இடம் பெற்றது.

இந்த மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டதற்காகவே கோ. பழனிச்சாமியும் ஏராளமான கட்சித் தொண்டர்களும் கைது செய்யப்பட்டனர்.

## தமிழ்நாடு அரசின்

# மதுக்கொள்கைக்குஎதிர்ப்பு; 500பேர் உண்ணாவிரதம்

தலைமையுமே, இவ் ஒத்திவைப்பிற்குக் காரணமாகும்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவினால், தமிழரின் அபிலாசைகளைத் தீர்க்கமுடியாது என்பது முன்னரே தெரிந்த விடயம்தான். சிறிலங்கா பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அதே சிங்கள பேரினவாத சக்திகள்தான் பாராளுமன்றத் தெரிவுக் குழுவையும் அதே, விகிதாசாரத்தில் பிரதிநிதித்துவப் படுத்துவதென்பதில் இருந்தே அதைப்புரிந்து கொள்ளலாம். ஆனால், நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி, உயிர் இழப்புக்கள் என்பவற்றுடன் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணாவிட்டால், நாடே உருப்படாது என்ற நிலையில் மிகக்குறைந்த பட்ச முடிவாவது பாராளுமன்றத் தெரிவுக்குழு முன்வைக்கும் என சிலரால் எதிர்பார்க்கப்பட்டது. அதிலும் குறிப்பாக கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்களினால் எதிர்பார்க்கப்பட்டது.

அதாவது, கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்கள் அரசியல் நடத்தக்கூடிய அளவிலாவது, இத்தெரிவுக்குழு தீர்வுத்திட்டத்தை வைக்கும் என எதிர்பார்த்தன. ஆனால், சிங்களப்பேரினவாத சக்திகள் தமது நிலைப்பாட்டில் இருந்து இம்மியளவுதானும் நகரவில்லை. அதாவது, கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் தமது இனத்திற்கு பெரும் துரோகமிழைத்து காட்டிக்கொடுப்புக்களைச் செய்த போதும் அவர்களின் எதிர்கால அரசியல் உயிர்வாழ்வுக்காவது, அவர்களுடன் சில அதிகாரப்பரவலாக்கலைச் செய்து கொள்ளச் சிங்களப் பேரினவாத சக்திகள் தயாராக இருக்கவில்லை.

இதனால் மக்களால் ஒதுக்கப்பட்ட கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் அரசினால் ஒதுக்கப்பட்ட நிலையில் இன்று திக்குத்திசை தெரியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறன கடந்தவாரம் முன்னாள் ஈரோஸ் பிரமுகர் ராஜி வழங்கிய பேட்டியே சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கின்றது. அவர் தனது பேட்டியில் சிறிலங்கா அரசாங்கத்தின் நடத்தை ஏமாற்றத்தைத் தருகின்றதெனத் தெரிவித்தார் அவர் ''ஆயுதங்களைக் கைவிட்டு ஜனநாயக வழிக்குத் திரும்பிய எமக்கு அதற்கான ஊக்குவிப்புக் கிடைக்கவில்லை இதனால் நாம் ஆயுதங்களைக் கைவிட எடுத்த தீர்மானம் சரிதானா என்றுகூட எண்ணத் தோன்றுகின்றது'' என தனது பேட்டியில் குறிப்பிட்டார்.

அதாவது, தமது அரசியல் நிலைப்பாடே தவறானது என்ற நிலையில், ஏதாவது துரும்பொன்று சிக்கினால்கூட தமது அரசியலை நடத்த போதும் எனத் தத்தளித்துக் கொண்டிருக்கும் தமிழ்க் குழுக்களுடன்கூட சமரசம் செய்து கொள்ளும் நிலையில் சிறிலங்கா அரசாங்கமோ, பேரினவாத சக்திகளோ இல்லை. இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வே ஒரே வழி எனச் சிங்கள பேரினவாதிகள் செயற்பட்டு வருகின்றனர். இவ்வருட இறுதிக்குள் இராணுவத் தீர்வொன்றைக்காண இராணுவத்தலைமையும், அரசியற் தலைமையும் தீவிர முயற்சியிலும் இறங்கியுள்ளன.

இந்நிலையில் இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே ஒரேவழி என்றசிறிலங்கா அரசாங்கத்தின் போக்கிற்குதகுந்த பதிலடி கொடுக்கப்பட வேண்டும் இதன் மூலமே சிறிலங்கா அரசாங்கத்தின் இராணுவத் தீர்வு என்ற சிந்தனையில்மாற்றம்ஏற்படுத்தமுடியும்அதாவது இராணுவத்தினால் இயலாது என்பது புரிய வைக்கப்பட வேண்டும். தமிழ் மக்கள் ஒன்று திரண்டு சிங்கள இராணுவத்தை முறியடிக்க வேண்டும்.

# சகல தேர்தல்களிலும் தனியாகப் போட்டியிடும்

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி மற்றக்கட்சிகளுடன் கூட்டுச்சேராமல் தேர்தல்களில் தனியாகப்போட்டியிடும் என்று காமினி திசாநாயக்கா ண்டியில் கருத்தரங்கொன்சல் கூறினார்.

நிமத்திய மாகாண இத்து கலாச்சார மண்டபத்தில் இடம்பெற்ற கருத்தரங்கில் பேசிய அவர், பாராளுமன்றம் மாகாணசபைகள் மற்றும் ஜனாதிபதி தேர்தல் ஆகிய அனைத்துத் தேர்தல்களிலும் கட்சி தனியாகப் போட்டியிட்டு நிற்கும் என்றார்.

# பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் இனப்பிரச்சினையின் தீர்வுத் திட்டம்

இனப் பிரச்சினைக்கு தீர்வொன்றைக் காண்பதற்கென அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு அரசியல் கட்சிகளுக்கிடையே தற்போது விநியோகித்துள்ள ஆவணத்தின் சில பகுதிகள் வெளியிடப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கிற்கு இரண்டு தனித் தனி சபைகள் மற்றும் இரண்டிலும் உள்ள பிரதிநிதிகளைக் கொண்ட இணைந்த சபை பற்றி குறிப்பிடும் இத் தீர்வுத் திட்டத்தில் காணப்படும் சில விபரங்கள் வருமாறு:-

## இரண்டு சபைகள்:-

பல தேசிய, பல மத குழுக்களிடையே அமைதி தோன்றவும், அபிவிருத்திக்கு வழி செய்வதையும் நோக்கமாகக் கொண்டு இந்த ஆலோசனைகள் சமர்ப்பிக்கப்படும் அதே சமயம் இனங்களுக்கிடையே இணக்கத்தை ஏற்படுத்தவும் முயற்சிக்கும் இதனை மனதில்கொண்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கென இரு தனித்தனி சபைகள் தெரிவு செய்யப்படும். இம் மாகாணங்களின் சனத்தொகை விகிதாசாரத்தைக் கணக்கிட்டால் வடக்கில் 98 சத விகித தமிழர்களும் கிழக்கில் 43 சதவிகிதம் தமிழர்களோடு 33சதவிகித முஸ்லிம்களும், 21, சதவிகித சிங்களவரும் ஏனையவர்கள் 2 சதவிகிதமும் வாழ்கின்றனர் எனலாம்.

## அபெக்ஸ் அசெம்பிளி

இரண்டு சபைகளுக்கும் தனித்தனியே தேர்தல் மூலம் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்ட பின்னர் உறுப்பினர்களின் கூட்டுக் கூட்டமொன்று அபெக்ஸ் அசெம்பிளிஉறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக நடத்தப்படும் இந்த அபெக்ஸ் அசெம்பிளி தான் இரு சபைகளுக்குமான பொதுத் திட்டங்களை வரைவதோடு, நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் கடமையையும் ஆற்றும்.

வடக்கு மாகாணத்தின் நிர்வாக நடைமுறைகள் யாவற்றையும் வடக்கிற்கான சபையும. கிழக்கு மாகாணத்தின் நிர்வாக நடைமுறை அனைத்தையும் கிழக்கிற்கானசபையும் கவனிக்கும். ஒவ்வொரு சபையும் தத்தமது மாகாணத்தின் இன விகிதாசாரத்திற்கேற்ப வேலைவாய்ப்பு மற்றும் நடைமுறைத் திட்டங்களை வகுக்கும். இந்த சபைகளுக்குப் போதுமான அதிகாரப் பங்கீடு வழங்கப்படவேண்டும் என்பதுடன், அப்பிரதேச மக்களின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்யக்கூடியதாகவும் அவை அமைய வேண்டும்.

## நடைமுறைப்படுத்தும் அமைப்புகள்

பங்கீடு செய்யப்பட்ட அதிகாரங்கள் அனைத்தும் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க ஒரு தனியான அமைப்பு உருவாக்கப்படும் இந்த அமைப்பின் உறுப்பினர்களின் விகிதாசாரம் குறித்து பாராளுமன்றத் தெரிவுக்குழு முடிவுசெய்யும்.

## தேசிய சபை

எல்லாமாகாண முதலமைச்சர்களும், ஜனாதிபதி, அமைச்சர்கள், பாராளுமன்ற எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் ஆகியோரை மாதமொரு முறையேனும் சந்திப்பதற்கு வசதியாகத் தேசிய சபை ஒன்று உருவாக்கப்படும். இந்ததேசிய சபையின் பிரதான செயற்பாடானது புரிந்துணர்வையும் இணக்கத்தையும் ஏற்படுத்தி மத்திய அரசுக்கும், மாகாண அலகுகளுக்குமிடையே நல்லுறவை வளர்த்து தேசத்தைப் பலம் பொருந்தியதாகக் கட்டி எழுப்புவதாக இருக்கும்.

## பாராளுமன்றதெரிவுக் குழுவின் இலக்கு

தெரிவுக்குழுவானது இந்த மாதிரி அமைப்புப்பற்றி விவாதிப்பதுடன் இதனை விருத்தி செய்து அமைப்பு மாற்றங்கள் பற்றி சிபார்சுசெய்யும் அதே வேளை அதிகாரப் பரவலாக்கலுக்கான வேறு அரசியல் மாதிரிகள் பற்றியும் சிபாரிசுகள் செய்யலாம்.

அதன் பின்னர் தேவை ஏற்பட்டால் தெரிவுக்குழுவிற் தச் சமர்ப்பிக்கப்பட்ட பல்வேறு பிரேரணைகளையும் பரிசீலிப்பதற்காக தெரிவுக்குழு ஒரு உப குழுவை அமைக்கலாம். உப குழு பரிசீலனையின் பின்னர் இந்தப் பிரேரணையின் திருத்திய வடிவம் அல்லது இந்தப் பிரேரணை அல்லது முற்றிலும் புதியதான ஒரு பிரேரணை நகல் ஒன்றை சிபார்சு செய்யும்.

## நடைமுறையாக்கல்

பாராளுமன்ற தெரிவுக்குழு கருத்தொருமைப்பாட்டின் அடிப்படையில் அனைவருக்கும் ஏற்புடையதான தீர்வுத் திட்டம் ஒன்றை முன்மொழியுமாயின் அதன் பின்னர் நடைமுறையாக்கத்திற்கு தேவையான வழிவகைகள் பற்றி ஆராயப்படும்.

இதன் இரண்டாம் கட்டமாக வடக்கு - கிழக்கு மாகாணங்களின் நிர்வாகத்திற்கென இடைக்கால நிர்வாக சபையொன்று நிறுவப்படும். பாராளுமன்றத்திற்கு உள்ளும் வெளியிலும் செயற்படும் அரசியற் கட்சிகள் புனர்வாழ்வு, மற்றும் புனர்நிர்மாணப் பணிகளை நிறைவேற்றும் இலக்குடன் இதற்கான உறுப்பினர்களை நியமனம் செய்யும் உரித்துடையனவாகும். நியமிக்கப்படும் இந்த இடைக்கால சபையின் உறுப்பினர்கள் இந்தப் பிராந்தியத்தின் பல்வேறு இடங்களிலும் மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வுப் பணிகளை மேற்பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்படுவர் இதன் மூலம் இந்தப் பிரதேசங்களின் மக்களோடு இவர்களுக்கு நெருங்கிய தொடர்பு ஏற்படுத்தப்படும். இந்த அரசியல் தீர்வுத்திட்டத்தின் ஊடாக படிப்படியாக முன்னேற்றம் ஏற்பட தற்போதைய கொந்தளிப்பு சூழல்மாறி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு இருதரப்பு மற்றும் பலதரப்பு உதவி நிறுவனங்களிடமிருந்தும், உதவிகள் கிடைப்பதற்கு வழி செய்யப்படும்.

நியமிக்கப்படும் உறுப்பினர்கள் தமது நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்வதற்கான வசதிகள் அனைத்தும் அவர்களுக்கு வழங்கப்படும். அவர்களது பிரசன்னமும், செயற்பாடும், பாதுகாப்பு பற்றிய பதற்றத்தை இராம மக்களுக்கு ஊட்டாதவாறு கவனிக்கப்படும் அதே சமயம் அமைதி நிலை படிப்படியாகத் தோன்றுவதற்குவகைசெய்யப்படும்.

முடிந்தளவு விரைவில் நியமன உறுப்பினர்களைக் கொண்ட இந்தச் சபையானது தேர்தல் ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களால் நிரப்பப்படும்.

பாராளுமன்றத்தெரிவுக்குழுவானது இந்த நாட்டில் நிரந்தரமான அமைதியைத்தோற்றுவிப்பதாக பொறுப்புணர்வோடும், அர்ப்பணிப்போடும் செயற்படும் அதேசமயம் அதனுடைய பங்கும் பணியும் மிக முக்கியமானது ஆகும் அதனால் இடைக்கால நிர்வாக சபை ஒன்று அமையுமிடத்து இத்தெரிவுக்குழு ஒரு கண்காணிப்பு அமைப்பாகவும். நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் அமைப்பாகவும் செயற்படுவது பற்றி ஆலோசிக்கப்பட முடியும்.

# இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கைது

[சென்னை]

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் நாடு சட்ட மன்ற உறுப்பினர் கோ. பழனிச்சாமி நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்சக் கூலியை உயர்த்துவது, உபரி நிலங்களைப் பகிர்ந்தளிப்பது போன்ற கோரிக்கைகளுக்காக தஞ்சை, நாகை, சாயிதே, மிலலத் மாவட்டங்களில் தமிழ் நாடு விவசாயிகள், தொழிலாளர்கள் சங்கம் சார்பில் அரச அலுவலங்களின் முன் நேற்று மறியல் போராட்டம் இடம் பெற்றது.

இந்த மறியல் போரட்டத்தில் கலந்து கொண்டதற்காகவே கோ. பழனிச்சாமியும் ஏராளமான கட்சித் தொண்டர்களும் கைது செய்யப்பட்டனர்.

# தமிழ்நாடு அரசின் மதுக்கொள்கைக்குஎதிர்ப்பு; 500பேர் உண்ணாவிரதம்

(சென்னை)

தமிழ் நாட்டில் சென்னை அரசு விருந்தினர் மாளிகைக்கு அருகே 200 பெண்கள் உட்பட் குறைந்தது 500 பேர் நேற்றுப் பன்னிரெண்டு மணி நேர உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர்.

மாநிலஅரசின் மதுக்கொள்கையை எதிர்த்து இந்த உண்ணா விரதம் மேற்கொள்ளப்பட்டது முழு அளவு மதுவிலக்கை அமுல் படுத்துமாறு கோரி இட்டத்தட்ட 30 தொண்டு நிறுவனங்களின் தொண்டர்கள் இந்த உண்ணா விரதத்தில் கலந்து கொண்டார்கள்.

# அண். நகர் குண்டு வெடிப்பு நான்கு பொலிசார் காயம்

(சென்னை)

சிதம்பரம் அருகேயுள்ள அண்ணாமலைநகர் காவல் நிலையத்தில் ஏற்பட்ட குண்டு வெடிப்பு ஒன்றினால் நான்கு பொலிசார் காயமடைந்துள்ளனர். இந்தக் குண்டுவெடிப்பினால் காவல் நிலையத்தின் நுழைவாயில் உட்பட ஜன்னல்கள் என்பன பலத்தசேதம் அடைந்துள்ளன.

இந்தக் காவல் நிலையத்தினரால் கடந்த மாதம் இரண்டாம் திகதியன்று கைது செய்யப்பட்ட ஒருவர் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது மரணமடைந்ததும், அதைத் தொடர்ந்து அவரது மனைவி மீது பலாத்காரம் பிரயோகிக்கப்பட்டதாகவும் செய்திகள் வெளிவந்திருந்தது தெரிந்ததே

பல்வேறு அரசியல் கட்சிகளும் இது தொடர்பாக எழுப்பிய சர்ச்சையை அடுத்து இக்காவல் நிலையத்தைச் சேர்ந்த இரு காவலர்கள்பதவி நீக்கம் செய்யப்பட்டதும், ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவர் விசாரணைக்காக நியமிக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

எனினும் இந்தக் குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை. இதேவேளை இக்காவல் நிலையத்திற்கு வெளியேசுவரோரமாகவெடிக்காத நிலையில் ஒரு குண்டு கண்டுபிடிக்கப்பட்டு நேற்றுக் காலையில் செயலிழக்க வைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

# வடஅயர்லாந்து பற்றிப் பேச பிரித்-அயர்லாந்து இணக்கம்

(லண்டன்)

வட அயர்லாந்து பற்றி முறையான பேச்சு நடத்துவதற்கு பிரித்தானியாவும் அயர்லாந்தும் இணக்கம் கண்டுள்ளன.

இருபது ஆண்டுகளுக்கு மேலாக இடம்பெற்று வரும் வன்முறைக்கு முடிவு கட்ட பிரித்தானியாவும் அயர்லாந்தும் முயற்சிக்கின்றன என்றும்,

வட அயர்லாந்துக்கான செயலாளர் பற்றிக் மத்தியூ, அயர்லாந்து வெளிநாட்டமைச்சர் டேவிட் அன்ரூ ஆகியோருக்கிடையே லண்டனில் இரண்டரை மணித்தியாலங்களாக நடைபெற்ற பேச்சு வார்த்தையின் போது இந்த உடன்பாடு காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈழநாதம்

# ஏரியாட்டிக் கடலுக்கு அமெரிக்க கப்பற்படை

(வாஷிங்டன்)

கடற்படைமாலுமிகளை ஏற்றிய ஆறு கப்பல்களையும், ஹெலிகொப்டர்களையும் கொண்ட கடற்படை கப்பல் அணி ஒன்றை அமெரிக்கா ஏரியாட்டிக் கடலுக்குள் அனுப்பி வைத்து வருவதையடுத்து முற்றுகைக்கு உள்ள பொஸ்னியா தலைநகர் சரயாவோவில் இராணுவக் குறுக்கீட்டுக்கான வாய்ப்புக்கள் எந்த ஒரு நேரத்திலும் நேரிடலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சண்டை நிறுத்தம் அனுசரிக்கப்படாமல் போனால் சர்வதேச உதவிப் பணிக்குழுவினருக்கு அமெரிக்கப் படைவீரர்கள் விமான வழிப்பாதுகாப்பு அளிப்பார்கள் என அமெரிக்கப் பாதுகாப்புத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேநேரம் அமெரிக்ககுறுக்கீட்டை ஐ.நா. கோரவில்லை என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது முன்னதாக இவ்வித உதவிகளை ஐ.நா.சபை நாடுமேயானால் உதவிப் பணி முயற்சிகளுக்கு அமெரிக்க கடற்படை மற்றும் ஆகாயப் படை பாதுகாப்பை அளிப்பதற்கு தயாராகவே இருக்கின்றது என அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்திருந்தார்.

# பாராளுமன்ற தெரிவுக் குழுவை கேலியாக்க முற்படாதீர்

-- புதிய ஜனநாயகக் கட்சி

(கொழும்பு)

தாமே உருவாக்கிய பாராளுமன்றத் தெரிவுக் குழுவை கேலிக்குரியதாக்கி செயலிழக்கச் செய்யும்வேலையை ஆளும் கட்சியும் எதிரணியினரும் செய்யாது. அதனூடாகத் தமிழ் பேசும் மக்கள் ஏற்கக்கூடிய நியாயமான தீர்க்குரிய அம்சங்களை தேர்ந்தெடுக்கும் சகல முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு புதிய ஜனநாயக கட்சியின் அமைப்பாளர் இ. தம்பையா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

ஆளும் கட்சியும் பிரதான எதிர்க்கட்சியும் தெரிவுக்குழு ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த பட்ச தீர்வினையாவது முன்வைக்கமுடியாமல் காலம் கடத்துவது விசனத்துக்குரியது.

ஐ.தே. கட்சி அரசு தொடர்ந்து பதவியில்இருக்க பெரும் முயற்சி செய்கிறது. எதிர்க்கட்சியும் பதவிக்கு வர எத்தனிக்கிறது. அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது ஆதிக்கப் பிடியை நிலை நிறுத்தவும் இந்தியா தனது நலனை விஸ்தரிக்கவும் முயல்கின்றன. இவர்கள் அனைவரும் தத்தமது நோக்கங்களை ஈடேற்றிக் கொள்ள வசதியாகக் கிடைத்த கருவியே இனப்பிரச்சினையாகும்.

ஆனால் தமிழ் பேசும் மக்களுக்கு நியாயமான உரிமைகளும், நிம்மதியான வாழ்வுமே தேவை அத்துடன் முழு நாட்டு மக்களுக்கும் சமாதானமும் சகஜ நிலையும் அவசியம் தேவையாக உள்ளது.

# பெயர்களை பதிவு செய்க

கொழும்பிற்கு விசேட சிகிச்சைக்கு என கப்பல் மூலம் செல்ல விரும்பும் நோயாளர்கள் எதிர்வரும் 6ம் 7ம் திகதிகளில் காலை 9.00 மணிக்கு யாழ் போதனா வைத்தியசாலையில்பதிவு செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

இவர்கள் தகுந்த மருத்துவச் சான்றிதழ்களுடன் பெயர்களைப் பதிவு செய்துகொள்ள சமுகம் தருமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# புதிய திட்டம் ஏற்புடையதல்ல

(கொழும்பு)

இனப் பிரச்சினைத் தீர்வுக்கு தனித்தனி மாகாணசபைகள் திட்டம் ஏற்புடையதல்ல என்று கொழும்பிலுள்ள தமிழ் குழுக்கள் ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளன.

அக்கடிதத்தில் மேலும் வட-கிழக்கு இணைப்பு உட்பட தாம் சமர்ப்பித்த நான்கு அம்ச யோசனையை இக் கட்சிகள் வலியுறுத்தி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

# கொள்ளை முயற்சி தோல்வி இராணுவசிப்பாயும் கைது

(கொழும்பு)

வெல்லம்பிட்டியிலுள்ள தனியார் தொழிற்சாலை ஒன்றில் சம்பளப்பணம் ஏழு லட்சம் ரூபாவைக் கொள்ளையிட எடுக்கப்பட்ட முயற்சி பொது மக்களாலும், தொழிலாளர்களாலும் முறியடிக்கப்பட்டதாக கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொள்ளை முயற்சியில் ஈடுபட்டதாக இராணுவத்தினர் ஒருவர் உட்பட இருவர் தொழிலாளர்களால் பிடிக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# புலமைப்பரிசிலும் புறக்கணிப்பு

(கொழும்பு)

1991-1992 கல்வியாண்டில் அவுஸ்ரேலிய புலமைப்பரிசில் திட்டத்தில் தமிழ் மாணவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி புலமைப்பரிசில் திட்டத்திற்கு மாணவர்களை தெரிவுசெய்யும் விடயத்தில் உயர்கல்வி அமைச்சு அதிகாரிகள் தமிழ்-சிங்கள மாணவர்கள் என பாரபட்சம் காட்டி மிகக்குறைந்தளவு மாணவர்களையே தெரிவு செய்துள்ளதாக கொழும்பிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் இவ்வருடம் அதிகூடிய புள்ளிகள் பெற்ற நிலையில் உள்ள நூற்றுக்கணக்கான மாணவர்கள் விண்ணப்பித்து இருந்த போதிலும் நான்கு மாணவர்களே தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்த வருடமும் மிகக்குறைவான தமிழ் மாணவர்களே அவுஸ்ரேலியா புலமைப்பரிசில் திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (05)

# ஒய்வூதியம் வழங்கத்தவறின் சட்ட நடவடிக்கை

-மகாசிவம்

(கொழும்பு)

விதவைகள், அநாதைகள் ஒய்வூதியச் சட்டத்தின் கீழ் உரியவர்களுக்கு ஒய்வூதியம் வழங்கத் தவறினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்துள்ளார்.

அறிக்கை ஒன்றின் மூலம் இதனைத் தெரிவித்த அவர் விதவைகள், அநாதைகள் ஒய்வூதியச் சட்டத்தை சரியாகப் புரிந்து கொள்ளாத சில மாகாண கல்விப் பணிப்பாளர்களும், பிரதிக் கல்விப்பணிப்பாளர்களும் இருப்பதனால் பல இளம் விதவைகள் ஒய்வூதியத்தைப் பெற முடியாது சிக்கல்களின் மத்தியில் வாழ்கின்றனர்.

இதனால் 1989 ஆம் ஆண்டு இந்திய அமைதிப் படையின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்த புசல்லாவை சரஸ்வதி மகாவித்தியாலய ஆசிரியர் கந்ததாசனின் மனைவிக்கும் அவரின் பிள்ளைகளுக்கும் ஒய்வூதியம்இதுவரை கிடைக்கவில்லை. ஆசிரியர் கந்ததாசன் அரசபாடசாலையில் பத்து வருடம் சேவை செய்யாததால் அவருக்கு விதவை, அநாதை ஒய்வூதியம் பெறும் தகுதியில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விதவைகள், அநாதைகள் ஒய்வூதியம் பெறுவதற்கு பத்து வருடம் அரசசேவை வேண்டும் என்பது முற்றிலும் பிழையென்றும் ஒய்வூதியச் சட்டதிட்டங்களைத சரியாக புரிந்து கொண்டு தொழிற்படுமாறும் கோரியுள்ள சங்கத்தின் பொதுச் செயலாளர் இவ் விடயத்தை மத்தியமாகாண கல்வி அமைச்சர், மத்திய கல்வி அமைச்சு, ஒய்வூதியப் பணிப்பாளர் ஆகியோரின் கவனத்திற்கும் கொண்டுவந்துள்ளார்.

தாய் நாட்டை

ச்சி', முருகையா மகேந்திரன் (வயது-52, பெரிய விளாத்திக் குளம், ஓமந்தை, வவுனியா) ஆகியோரது விசாரணைகள் பூர்த்தியாகியுள்ளன.

எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு அப்பால் பிரயாணம் செய்யும் வேளையில் இராணுவத்துடன் தொடர்புபடும் இவர்கள் அற்பமான சலுகைகளுக்கு ஆசைப்பட்டு இராணுவ உளவாளிகளாக மாறியமை தெரியவருகின்றது. இராணுவத்தினரின் பணத்திற்கும், பொருளிற்கும், மதுவிற்கும் ஆசைப்பட்டுத்தமது தாய் நாட்டைக் காட்டிக்கொடுக்கும் அருவருப்பான செயலில் இவர்கள் ஈடுபட்டுவந்துள்ளனர்.

எம்முகாம்களை, காவல் நிலைகளை, நடமாட்டங்களை, எமது திட்டங்களை என்று எல்லாவிதமான காட்டிக்கொடுப்பு வேலைகளிலும் ஈடுபட்டுவந்த இவர்களுள் சிலர் இராணுவ உலங்கு வானூர்தியில் வந்து எமது நிலைகளை அடையாளங்காட்டுவதிலிருந்து இராணுவத்தாக்குதல் அணியுடன் இணைந்து தாக்குதலுக்கு வழிகாட்டுவது வரையான பலவித நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

எம் மக்களைக் காக்கும் வேலிகளாக எம் போராளிகள் களத்தில் வீழ்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் தம் தாய் நாட்டுக்குத் துரோகஞ் செய்து எதிரிக்குத்துணை போன இவர்களுக்கு எமமால் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. எம்மக்கள் மத்தியில் இன்னும் கலந்துள்ள துரோகிகளை அடையாளங்காண எமக்கு உதவும்படி எமது மக்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

சொந்த

# அமெரிக்கா படைப் பலத்தை பிரயோகிக்க வேண்டிவரும்

சரயேவோவாவில் மீண்டும் அமைதி நிலை சீர்குலையுமா

டிக்செனி எச்சரிக்கை

யின் அமெரிக்கா அதன் படை பலத்தைப் பிரயோகிக்க வேண்டி ஏற்படும் என்று அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டிக்செனி எச்சரிக்கை செய்துள்ளார்.

இதனிடையே நேற்று முன்தினம் முதல் யுத்த நிறுத்தம் ஒன்று அமுலுக்கு வந்திருப்பதையடுத்து பிரான்சிலிருந்து விமானங்கள் மூலம் அவசர நிவாரணப் பொருள்கள் சரயேவோவாவிற்கு கொண்டு செல்லப்பட்டு உள்ளன.

# வெளிவாரிய பட்டப்படிப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வெளிவாரிப் பட்டப் படிப்புக்கான முதற்கலை மற்றும் வர்த்தக கற்கை நெறிகளுக்காக மாணவர்கள் பதிவு செய்வதற்குரிய இறுதித் திகதி நாளை மறுதினம் ஆகும்.

எனினும் 1990 ஆகஸ்ட் (1991 ஏப்ரல்) க.பொ.த உயர்தரப் பரீட்சை அடிப்படையில் பல்கலைக் கழக மானியக்குழுவிலிருந்து பல்கலைக் கழக அனுமதியை எதிர்பார்த்திருக்கும் மாணவர்கள் அதற்கான மறுமொழி கிடைத்த பின்னர் பதிவு செய்து கொள்ளலாம் என்றும் வெளிவாரிப் பரீட்சைப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

# அதிபர்களின் கருத்தரங்கு

தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான அபிவிருத்திக் கருத்தரங்கு எதிர்வரும் 4ஆம் திகதி சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ். மாவட்டமுகாமைத்துவ நிலையத்தில் நடைபெறும்.

இக்கருத்தரங்கு பிற்பகல் 4-00 மணிக்கு முடிவடையும் என்பதால் மதிய போசன ஒழுங்குகளை செய்து கொண்டு வரும்படி அறிவிக்கப்படுகின்றது.

# தேசத்துரோகத்தை

படுவோரை தமிழீழ மக்கள் ஒவ்வொருவரும் இனம் காட்டி எங்களுக்கு உதவும்படி கேட்டுக் கொண்டுள்ளார். இச் செயல்களில் ஈடுபடுவோர் தமிழீழ மக்களினதும், எங்களினதும் கடுமையான தண்டனைக்கு உள்ளாவர்கள் இவர்களுக்கு மன்னிப்பே கிடையாது. இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

# 69 கோடி

விற்பனை செய்ததாகக் கண்டு பிடிக்கப்பட்டது.

ஆடைகளைத் தயாரித்து வெளிநாடுகளுக்கு அனுப்பும் ஏற்றுமதியாளர்கள் சுங்கத் தீர்வையின்றி துணிகளை இறக்குமதி செய்யலாம் இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்டவற்றில் ஐயாயிரம் ஆடைகள் மட்டுமே மீள ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது ஆனால் இவர்கள் 85 ஆயிரம் ஆடைகள்

# 6 புலிகள்

விடுதலை (லம்பா) இராஜரட்ணம் ஆனந்தராசா (கொக்குவில்மேற்குகொக்குவில்) லெப்டினன்ட் கலையரசன் (விஜயதீபன் கந்தப்பு சௌந்தரராஜன் (கறுப்பனைமன்னம்பிட்டி மட்டக்களப்பு) 2ஆம் லெப்டினன்ட் மணிமாறன் (சர்மா) வைத்தியநாதசர்மா ரமணானந்தசர்மா (மானிப்பாய்) வீரவேங்கை தமிழரசன் (குலசிங்கம் குணாளன் நீதிமன்ற வீதி பருத்தித்துறை) வீரவேங்கை பிரபயன் (பிலிப்ஸ்) அருளப்பு டிக்சன் -(மண்டைதீவு) இவ்வீரவேங்கைகள் அறு

ஓராண்டு நினைவஞ்சலி

லெப். சுகர்சன், லெப். நித்திலா

(கொழும்பு)

விதவைகள், அநாதைகள் ஒய்வூதியச் சட்டத்தின் கீழ் உரியவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கத் தவறினால் சட்ட நடவடிக்கை மேற் கொள்ளப் போவதாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்துள்ளார்.

அறிக்கை ஒன்றின் மூலம் இதனைத் தெரிவித்த அவர் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியச் சட்டத்தை சரியாகப் புரிந்து கொள்ளாத சில மாகாண கல்விப் பணிப்பாளர்களும், பிரதிக் கல்விப்பணிப்பாளர்களும் இருப்பதனால் பல இளம் விதவைகள் ஒய்வூதியத்தைப் பெற முடியாது சிக்கல்களின் மத்தியில் வாழ்கின்றனர்.

இதனால் 1989 ஆம் ஆண்டு இந்திய அமைதிப் படையின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்த புசல்லாவை சரஸ்வதி மகாவித்தியாலய ஆசிரியர் சந்திரதாசனின் மனைவிக்கும் அவரின் பிள்ளைகளுக்கும் ஒய்வூதியம் இதுவரை கிடைக்கவில்லை. ஆசிரியர் சந்திரதாசன் அரச பாடசாலையில் பத்து வருடம் சேவை செய்யாததால் அவருக்கு விதவை, அநாதை ஒய்வூதியம் பெறும் தகுதியில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விதவைகள், அநாதைகள் ஓய்வூதியம் பெறுவதற்கு பத்து வருடம் அரசசேவை வேண்டும் என்பது முற்றிலும் பிழையென்றும் ஓய்வூதியச் சட்ட திட்டங்களைச் சரியாக புரிந்து கொண்டு தொழிற்படுமாறும் கோரியுள்ள சங்கத்தின் பொதுச் செயலாளர் இவ் விடயத்தை மத்தியமாகாண கல்வி அமைச்சர், மத்திய கல்வி அமைச்சு, ஓய்வூதியப் பணிப்பாளர் ஆகியோரின் கவனத்திற்கும் கொண்டுவந்துள்ளார்.

கள் தமிழ்-சிங்கள மாணவர்கள் என பராபட்சம் காட்டி மிககுறைந்தளவு மாணவர்களையே தெரிவு செய்துள்ளதாக கொழும்பிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் இவ்வருடம் அதிகூடிய புள்ளிகள் பெற்ற நிலையில் உள்ள நூற்றுக்கணக்கான மணவர்கள் விண்ணப்பித்து இருந்தபோதிலும் நான்கு மாணவர்களே தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்த வருடமும் மிகக்குறைவான தமிழ் மாணவர்களே அவுஸ்ரேலியா புலமைப்பரிசில் திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (05)

வானூர்தியில் வந்து எமது நிலைகளை அடையாளங்காட்டுவதிலிருந்து இராணுவத்தாக்குதல் அணியுடன் இணைந்து தாக்குதலுக்கு வழிகாட்டுவது வரையான பலவித நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

எம் மக்களைக் காக்கும் வேலிகளாக எம் போராளிகள் களத்தில் வீழ்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் தம் தாய் நாட்டுக்குத் துரோகஞ் செய்து எதிரிக்குத்துணை போன இவர்களுக்கு எமமால் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. எம்மக்கள் மத்தியில் இன்னும் கலந்துள்ள துரோகிகளை அடையாளங்காண எமக்கு உதவும்படி எமது மக்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

பருவோரை தமிழீழ மக்கள் ஒவ்வொருவரும் இனம் காட்டி எங்களுக்கு உதவும்படி கேட்டுக் கொண்டுள்ளார் இச் செயல்களில் ஈடுபடுவோர் தமிழீழ மக்களினதும், எங்களினதும் கடுமையான தண்டனைக்கு யவர்கள் இவர்களுக்கு மன்னிடபே கிடையாது. இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

## 69 கோடி

விற்பனை செய்ததாகக் கண்டு பிடிக்கப்பட்டது.

ஆடைகளைத் தயாரித்து வெளிநாடுகளுக்கு அனுப்பும் ஏற்றுமதியாளர்கள் சுங்கத் தீர்வையின்றி துணிகளை இறக்குமதி செய்யலாம் இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்டவற்றில் ஐயாயிரம் ஆடைகள் மட்டுமே மீள ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது ஆனால் இவர்கள் 85 ஆயிரம் ஆடைகள் அனுப்பப்பட்டதாக இவர்களது ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.


யத்தில் நடைபெறும்.

இக்கருத்தரங்கு பிற்பகல் 4-00 மணிக்கு முடிவடையும் என்பதால் மதிய போசன ஒழுங்குகளை செய்து கொண்டு வரும்படி அறிவிக்கப்படுகின்றது

## 6 புலிகள்

விடுதலை (லம்பா) இராஜரட்ணம் ஆனந்தராசா (கொக்குவில்மேற்குகொக்குவில்) லெப்டினன்ட் கலையரசன் (விஜயதீபன் கந்தப்பு சௌந்தரராஜன் (கறுப்பளைமன்னம்பிட்டி மட்டக்களப்பு) 2ஆம் லெப்டினன்ட் மணிமாறன் (சர்மா) வைத்தியநாதசர்மா ரமணானந்தசர்மா (மாவிட்டபுரம்) வீரவேங்கை தமிழரசன் (குலசிங்கம் ஞானாளன் நீதிமன்ற வீதி பருத்தித்துறை) வீரவேங்கை பிரவயன் (பிலிப்ஸ்) அருளப்பு டிக்சன் -(மண்டைதீவு) இவ்வீரவேங்கைகள் அறுவருக்கும் விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## ஓராண்டு நினைவஞ்சலி



### வீரவேங்கை கீறோ

### திருநாவுக்கரசு குசலவன் (குகன்)

அன்னையின் மடியில்:- 07-05-1974
தமிழன்னையின் மடியில்:- 13-06-1991
திதி:- 02-07-1992

விடுதலையை வேண்டி நிற்கும்
தமிழின விடியலிற்காய் - கீறோ
எதிரியினை விரட்டிடும் ஆனையிறவு சமரினிலே
காற்றைக் கிழித்து உன் திரம் காட்டி
மாற்றானை விரட்டி விட்டு - கீறோ
காற்றோடு காற்றாய் நீயும் செல்லாமல்
தமிழ் மண்ணில் உன் உயிரை விட்டு
எம்மண்ணை முத்தமிட்டாய்
அன்றைய உன்பணி தொடர்ந்திட
இன்னும் ஓராயிரம் வேங்கைகள் களத்தினிலே

இவ்வண்ணம்
தாய்:- திருநாவுக்கரசு பகவதி
பழையகண்டிவீதி, சகோதரர்கள்:-மனோகரன்,
இராமநாதபுரம், மனோகரி, லவன்,
கிளிநொச்சி, யாழினி, குலா,
உற்றார், உறவினர், நண்பர்கள்.
(2720)

## லெப். சுதர்சன், லெப். நித்திலா

# நினைவஞ்சலி கூட்டமும் கருத்தரங்கும்

யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலை அரங்கில் இன்று 2-7-92 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு லெப்டினன்ட் சுதர்சன் (சிவகுருநாதன் மருத்துவபீடம் ஆரையம்பதி, மட்டக்களப்பு) அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவினையும் லெப்டினன்ட் நித்திலா (நல்லையா பவானி விஞ்ஞான பீடம் வல்வெட்டித்துறை) அவர்களின் 3 ஆம் ஆண்டு நினைவினையும் கூருமுகமாக மறுமலர்ச்சிக்கழகமும் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட மாணவர் ஒன்றியமும் இணைந்து நினைவஞ்சலிக் கூட்டத்தினை நடாத்த உள்ளனர் நினைவஞ்சலி உரைகளை தொடர்ந்து ''மாறும் உலகில் இந்தியாவின் புதிய வெளியுறவுக் கொள்கை'' என்ற தலைப்பிலான கருத்தரங்கு மு. திருநாவுக்கரசு அவர்கள் நிகழ்த்த உள்ளார். அனைத்து மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

### 1991ஆம் ஆண்டு ஏப்ரல்

### க. பொ. த. உயர்தர

# விசேட பரீட்சை

மேற்படி பரீட்சை சம்பந்தமாக, அரசாங்கத்தின் கல்வி அமைச்சர் பாராளுமன்றத்தில் வெளியிட்ட முடிவு சம்பந்தமாக மேற்கொண்டு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்கு 5 - 7 - 1992 (ஞாயிறு) அன்று காலை 10-00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் ஓர் ஆலோசனைக் கூட்டம் இடம்பெற உள்ளது. அக் கூட்டத்தில் மேற்படி பரீட்சையில் தோற்றிய மாணவ, மாணவிகளின் பெற்றோர்கள், கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கச் செயற்குழு உறுப்பினர்கள், அதிபர்கள் சங்கச் செயற்குழுஉறுப்பினர்கள், பாடசாலைகளின் அபிவிருத்திச் சபையின் நிர்வாக உறுப்பினர்கள், பாடசாலைகளின் பழைய மாணவ சங்க நிர்வாக உறுப்பினர்கள், பல்கலைக் கழக ஆசிரியர் சங்க நிர்வாக உறுப்பினர்கள், பல்கலைக்கழக மாணவ சங்க நிர்வாக உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது பங்கு பற்றும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

-நடவடிக்கைக் குழு-

(சி/4336)

## சொந்த

கிட்டாளைச்சேனை, ஒலுவில் போன்ற கிராமங்களில் வசித்த மேற்படி தமிழ்க் குடும்பங்களின் வீடுவாசல்கள் ஒன்றுமே தற்போது இல்லை என்றும் அங்கு போய் இருப்பதற்கு தங்களுக்கு எந்த விதமான பாதுகாப்பும் இல்லை என்றும் அந்த அகதிகள் கூறுகின்றனர்.

ஆகவே ஆலையடி வேம்பு தமிழ் பிரதேசத்திலே தங்களை குடியேற்றுமாறு சம்பந்தப்பட்ட 330 தமிழ் குடும்பங்களும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளனர்.

## தெரிவுக்குழு

பான தமது நிலையை இக்கட்சிகள் கடிதமொன்றின் மூலம் கூட்டாகத் தெரிவித்திருப்பதாகவும் அறியப்படுகிறது.

வட-கிழக்கு இணைப்பு உட்பட தாம் முன்வைத்துள்ள நான்கு அம்சத் திட்ட யோசனையை இக் கட்சிகள் கடிதத்தில் வலியுறுத்தியிருப்பதாகவும் தெரிகிறது.

இதேவேளை, பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் உல்லாச பயண, கிராமிய தொழில்துறை அபிவிருத்தி அமைச்சர் எஸ். தொண்டமானும் தனித்தனி மாகாண யோசனையை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை யென தெரிவித்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

## அதிகாரி

தீவிர மோதல்கள் இடம் பெற்றன எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, யுத்தமுனையில் இருந்து கிடைக்கும் சுயாதீனமான செய்திகளின்படி இராணுவத்தினருக்கு ஏற்பட்ட இழப்பு இதைவிட அதிகம் எனவும் பல கவசவாகனங்கள் சேதமடைந்ததாகவும் தெரிய வருகின்றது.

# பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம் (வ/து)

பதவி வெற்றிடங்கள்:- 1. லொறிச்சாரதிகள் -312/11
2. லொறிப் பாதுகாவலர்கள்

மேற்குறிப்பிட்ட பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன எமது சங்க எல்லைப்பரப்பிற்குள் வசிப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். விண்ணப்பப் படிவங்களை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

இப்பதவிகளுக்கான வயதெல்லை 18 முதல் 45 வயது வரையாகும் மேலும் கல்வித்தகைமைகள், வேதனம் பற்றிய விபரங்களை சங்கத் தலைமை அலுவலகத்தில் பார்வையிட்டு அதற்கமைய உங்கள் விண்ணப்பங்களை ''தலைவர், பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம் பருத்தித்துறை'' என்ற முகவரிக்கு 15-07-92 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவேண்டும். நீங்கள் அனுப்பும் தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் ''என்ன பதவிக்கு விண்ணப்பிக்கின்றீர்களோ அப்பதவியின் பெயர்'' குறிப்பிடல் வேண்டும்.

1992-06-30 [சி/4635] பொது முகாமையாளர்

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 01. 07. 1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 4656

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-
27-5121. 28-7662 27-5945, 26-1602, 26-951, 26-536, 24-6489, 26-3177, 24-6211, 24-6161, 26-3690, 41-534. 27-7050, 41-2383, 25-2327, 28-8444, 27-4888 26-3846, 42-3514, 28-2385, 24-5112, 26-514, 26-673, 28-3476, 26-3998, 25-1908, 37-3969, 25-402, 25-1184, 36-6340.

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-
26-6398, 24-5145. 26-2764, 42-1046, 22-6073, 24-1830, 24-922, 26-3356.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது